படங்கல பல்கலைக்கழகக் கல்லூரி - 2024

----

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

படங்கல பல்கலைக்கழகக் கல்லூரியின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகார சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் படங்கல பல்கலைக்கழகக் கல்லூரியின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இவ் அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கல்லூரியின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது கல்லூரியின் கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையில் கணக்கீடு செய்தல் மற்றும் படங்கல கல்லூரியின்

தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

படங்கல பல்கலைக்கழக கல்லூரியின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கல்லூரியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வு விடயப்பரப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளரின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக கல்லூரியின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை மாற்றியமைக்க வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது கல்லூரியின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது கல்லூரியின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிதியம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்,

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும்

1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணக்கமின்மை

	உரிய நியமங்களுடன் தொடர்பு மற்றும் இணக்கமின்மை	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் பந்தி 50 இன் பிரகாரம் சொத்தொன்று அதன் தன்மை மற்றும் செயற்பாடுகள் மீது வகைப்படுத்திக் காட்டப்பட வேண்டிய போதிலும், கூட்டுத்தொகை ரூபா	நிறுவனத்தின் சொத்துக்கள் வகைப்படுத்தப்பட்டிருந்த கட்டிடங்கள், ஆதனங்கள் மற்றும் பொறித்தொகுதிகள், அலுவலக உபகரணங்கள், நூலகப் புத்தகங்கள் ஆகிய	நிதிக்கூற்றுக்களை சான்றுபடுத்துவதற்கு முன்னர் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு

	3,192,615 இற்கான கிரயமொன்றுடனான சொத்துக்கள் 'ஏனைய சொத்துக்கள்'' கீழ் காட்டப்பட்டிருந்தது.	சொத்து வகைகளுக்கு நேரடியாக பொருந்தாத சொத்துகள் இவ்வாறு ஏனைய சொத்துக்கள் என நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ளது என.	இணங்க தயாரிக்கப்பட்டுள்ளது என உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்.
(ஆ)	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் பந்தி 65 இன் பிரகாரம் நடைமுறை அல்லாத சொத்துக்களின் ஆக்கபூர்வமான ஆயட் காலத்தை வருடாந்தம் மீளாய்வு செய்திருக்காத காரணத்தினால் ரூபா 19,726,921 தொகை கிரயத்தையுடைய கணினிகள், நூலகப் புத்தகங்கள், மென்பொருட்கள், ஏனைய சொத்துகள் முழுமையாக பெறுமானத் தேய்வு கழிக்கப்பட்டிருந்த போதிலும், தொடரந்தும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. அதன்படி, ஏற்பட்டுள்ள மதிப்பீட்டு வழு இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் திருத்தம் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	இந்த முழுமையாக பெறுமானத் தேய்வு கழிக்கப்பட்டு முடிவடைந்துள்ள சொத்துக்களின் பெறுமதியை மீண்டும் கணிக்கப்பட்டு அடுத்த ஆண்டின் போது நிதிக்கூற்றுக்களில் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	நிதிக்கூற்றுக்களை சான்றுபடுத்துவதற்கு முன்னர் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ளது என உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்.

1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2024 திசெம்பர் 31 திகதி ரூபா 2,790,288 இற்காக கொள்வனவு செய்திருந்த WIFI network இற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த செலவுகள் அருவச் சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட வேண்டிய போதிலும், கட்டிடங்கள் மற்றும் கட்டிட அபிவிருத்தி அலுவல்கள் (Partition & Other Construction Building) கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	மீளாய்வாண்டின் போது கட்டிடத்தின் நிரந்தரமாக பொருத்தப்பட்டுள்ள WIFI வலையமைப்பு கட்டிடத்திலே மேற்கொள்ளப்பட்டிருந்த பொருத்து ஒன்றாக காணப்படுகின்றமையால் மற்றும் அதனூடாக கட்டிடத்தின் பெறுமதி அதிகரித்தல் மேற்கொள்ளப்படுவதனால் அந்தச் செலவு கட்டிடங்கள் அபிவிருத்தி அலுவல்களின் கீழ் நிதிக்கூற்றுக்களில் காட்டப்படுகின்றது என.	நிதிக்கூற்றுக்கள் சான்றுபடுத்துவதற்கு முன்னர் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ளனவா என உறுதிப்படுத்த வேண்டும்.
(ஆ)	2025 மார்ச் மாதத்தில் கிடைத்திருந்த ரூபா 1,050,175 தொகைக்கான திறன் பலகையொன்றுக்காக 2024 திசெம்பர் மாதத்தில் அந்தப் பெறுமதிக்கு காசோலையொன்று வழங்கப்பட்டு 2024 ஆண்டின் கொள்வனவு என கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால்	இந்த அலுவலக உபகரணம் 2024 திசெம்பர் மாதத்தில் கல்லூரிக்கு கிடைத்திருந்த போதிலும், அவற்றில் காணப்பட்ட மென்பொருள்கள் பொருந்தாமையால் மீண்டும் வழங்குனர்களுக்கு	நிதிக்கூற்றுக்கள் சான்றுபடுத்துவதற்கு முன்னர் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ளனவா என உறுதிப்படுத்த

மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நடைமுறை அல்லாத சொத்துக்கள் மற்றும் காசு மீதி அந்தப் பெறுமதியினால் மிகையாகவும் மற்றும் குறைவாகவும் காட்டப்பட்டிருந்தது.	அனுப்பப்பட்டிருந்தது. பின்னர் அந்த உபகரணம் உரிய முறையில் 2025 மார்ச் மாதத்தில் கல்லூரிக்கு கிடைத்திருந்தது என.	வேண்டும்.
(இ) 2023 மற்றும் 2024 ஆண்டுகளின் போது நீர் பவுசர்களின் மூலம் பெற்றுக்கொண்டிருந்த குடிநீருக்காக செலுத்தப்பட வேண்டியிருந்த கட்டணம் ரூபா 99,000 தொகை கணக்கீடு செய்திருக்கவில்லை.	இந்த நீர் பவுசரிற்கான பில்பத்திரங்கள் 2025 ஆண்டிலேயே கிடைத்திருந்தது. அதன் காரணமாக 2024 கணக்குகளில் இந்தச் செலவுகளை கணக்கீடு செய்ய முடியாமல் இருந்தது என.	நிதிக்கூற்றுக்கள் சான்றுபடுத்துவதற்கு முன்னர் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ளனவா என உறுதிப்படுத்த வேண்டும்.

1.6 சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மை

சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு	இணக்கமின்மைகள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை			
(i) நிதிப் பிரமாணம் 134(3)	வாழ்க்கைத்தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் உள்ளகக் கணக்காய்வு விடயங்கள் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், கல்லூரி ஆரம்பிக்கப்பட்ட 2014 ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டு கணக்காய்வு அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்வதற்காக வாழ்க்கைத் தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக் கழககத்தினால் உள்ளகக் கணக்காய்வு பிரிவின் உதவியை பெற்றுக்கொள்வதற்கு எதிர் காலத்தில் எதிர்பார்க்கப்படுகின்றது என.	கணக்கீட்டு உத்தியோகத்தரினால் இது தொடர்பாக விசாரணையொன்று மேற்கொண்டு கடமைகள் நிறைவேற்றாமை தொடர்பாக தாபனக் கோவையின் படி ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ii) நிதிப் பிரமாணங்கள் 225, 257 மற்றும் 215	கொடுப்பனவு மேற்கொள்வதற்காக கொடுப்பனவு செய்யும் உத்தியோகத்தருக்கு சமர்ப்பிக்கப்படுகின்ற உறுதிச் சீட்டுக்கள் முழுமையாக தயாரிக்கப்பட்டு சான்றுபடுத்தப்பட்டு குறிப்பிட்ட திகதியில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் திறன் பலகையொன்று (Smart	இந்த அலுவலக உபகரணம் 2024 திசெம்பர் மாதத்தில் கல்லூரிக்கு கிடைத்திருந்த போதிலும், அவற்றில் காணப்பட்ட மென்பொருள்கள் பொருந்தாமையால் மீண்டும் அனுப்பப்பட்டது. பின்னர் அந்த உபகரணம் உரிய	நிதிப் பிரமாணங்களின் படி கொடுப்பனவு செய்யப்பட வேண்டும். தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்தின் 38(1)இ பிரிவின் கீழான மீளாய்வின் போது இந்தத்

	Board) கொள்வனவு செய்வதற்காக ரூபா 1,050,175 தொகை பெறுமதியான உறுதிச் சீட்டொன்று 2024 திசெம்பர் 31 திகதி செலுத்தப்பட்டிருந்த போதிலும், அதன் இன்வொயிஸ் திகதி 2025 பெப்ரவரி 27 மற்றும் வழங்குனரினால் பண்டம் வழங்கப்பட்ட திகதி 2025 மார்ச் 06 ஆகும்.	முறையில் கல்லூரிக்கு 2025 மார்ச் மாதத்திலேயே கிடைத்திருந்தது. எவ்வாறாயினும், குறிப்பிட்ட விவரக் குறிப்புக்களுக்குரிய பண்டங்கள் கிடைத்த பின்னர் மாத்திரம் கொடுப்பனவு செய்யப்படுகின்றதென.	துறை தொடர்பாக கவனம் செலுத்தி கணக்கீட்டு உத்தியோகத்தரினால் எழுத்துமூல அறிவுரைகள் மற்றும் கட்டளைகள் வெளியிடப்பட வேண்டும்.
(ஆ) 2021 நவம்பர் 16 திகதிய 01/2021 இலக்கம் கொண்ட அரச தொழில் முயற்சிகள் சுற்றறிக்கை மூலம் வெளியிடப்பட்டுள்ள தாபனம்சார் கட்டுப்பாடு தொடர்பான வழிகாட்டல்கள் மற்றும் அரச தொழில் முயற்சிகளுக்கான (SOEs) செயற்பாட்டுக் கைநூல் வழிகாட்டல் 4.2 (ஏ)	ஏதேனும் ஒரு ஆண்டின் போது குறைந்தளவு 04 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் போது நிறுவனத்தினால் அவ்வாறான கூட்டங்கள் நடாத்தப்பட்டிருக்கவில்லை.	பல்கலைக் கழக கல்லூரிகளின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் வாழ்க்கைத் தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக் கழகத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது என.	செயற்பாட்டுக் கைநூலின் படி கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டு செயற்பாட்டு விளைவுகள் ரூபா 4,556,748 இற்கான மிகையொன்று காணப்பட்டதுடன் அதற்கு நேர் மாறாக முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 5,283,353 தொகையாக இருந்தது. அதன்படி நிதி விளைவுகளில் ரூபா 9,840,101 இற்கான முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. இந்த முன்னேற்றத்திற்கு மொத்த வருமானம் ரூபா 22,548,739 தொகையினால் அதிகரித்தல் பிரதானமான காரணமாக இருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ திறமையின்மை

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	அமைச்சினால் கிடைத்திருந்த அறிவுரைகளின் படி கல்லூரியின் ஒவ்வொரு கல்வி ஆண்டுகளுக்குமான அனைத்துப் பாடநெறிகளுக்கும் 30 மாணவர்கள் வீதம் சேர்க்கப்பட வேண்டிய போதிலும், 2019 முதல் 2024 வரையான ஆட்சேர்ப்புக்களை பரிசோதனை செய்த போது 13 சந்தர்ப்பங்களில் மாணவர்கள் 01 இலிருந்து 22 வரையான வீச்சில் மாணவர்கள் குறைவாக சேர்க்கப்பட்டு பாடநெறிகள் நடாத்தப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் போது பண்ணை இயந்திரத் தொழில்நுட்பம் (Farm Machinery Technology) பாடநெறிக்காக மற்றும் அளவீட்டுக் கணிப்பீட்டு (Quantity Surveying) பாடநெறிக்காக முறையே 27 மற்றும் 57 சதவீதம் வரையான குறைந்த பெறுமதியை கொண்டிருந்தது.	பல்கலைக் கழக கல்லூரிக்காக மாணவர்களை சேர்ந்துக்கொள்ளும் போது பிரதான பத்திரிகைகளில் அறிவித்தல் வெளியிடுதல் ஊடாக விண்ணப்பங்கள் அழைக்கும் சந்தர்ப்பம் ஆரம்பித்தது முதல், பல்வேறு விளம்பர ஊடகங்கள் மூலமாக அறிவுறுத்தும் அலுவல்கள் ஆரம்பிக்கப்படுகின்றது. அதன்படி, 2019 ஆண்டு முதல் 2024 ஆண்டு வரை ஒவ்வொரு ஆண்டிலும், குறைந்த கொள்திறனை மிகைத்து மாணவ விண்ணப்பபத்திர எண்ணிக்கையொன்று சேகரிக்கப்பட்டிருந்தது என.	மாணவர்கள் உச்ச கொள்திறனுடன் செயற்படுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்தின் 38(1)இ பிரிவின் கீழான மீளாய்வின் போது இந்தத் துறை தொடர்பாக கவனம் செலுத்தி கணக்கீட்டு உத்தியோகத்தரினால் எழுத்துமூல அறிவுரைகள் மற்றும் கட்டளைகள் வெளியிடப்பட வேண்டும்.
(ஆ)	கல்லூரியின் இரண்டு வருடங்களுக்காக கல்விப் பாடநெறி மற்றும் ஒரு வருடத்திற்கான தொழிலுடனான பயிற்சியை வெற்றிகரமாக பூர்த்தி செய்துள்ள மாணவன் ஒருவருக்கு தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை (NAITA) இனால் வாய்மொழி மூலம் தொழிலுடனான பயிற்சி பரீட்சை (OJT viva) நடாத்தப்படும். அதன் பெறுபேறுகளின் அடிப்படையில் மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் (TVEC) கொடுத்தல் நடாத்தப்படுகின்ற வாய்மொழிப் பரீட்சைக்கும் (viva) மாணவர்கள் அனுப்பப்படுகின்றதுடன், இந்த வாய்மொழிப் பரீட்சையில் சித்தியடைவதன் மூலம் பாடநெறி	இந்த பாடநெறிக்கு பதிவு செய்யும் மாணவர்களுக்கு 02 வருட கல்விக் காலமும் மற்றும் ஒரு வருட கட்டாய களப் பயிற்சியொன்றும் (OJT) பூர்த்தி செய்தல் கட்டாயமாகும். களப் பயிற்சி (OJT) முடிவடைந்த பின்னர் கல்லூரியினால் அறிவிக்கப்படுவதன் மூலம் தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபையினால் களம்சார் பயிற்சியில் (OJT) வாய்மொழி மூல பரீட்சையொன்று நடாத்தப்படுவதுடன், அதன் பெறுபேறுகள் வெளியிடப்பட்ட பின்னர் மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் (TVEC) வாய்மொழி மூல	பாடநெறியை மதிப்பாய்வு செய்யும் செய்முறையை விரைவுபடுத்தி சான்றிதழ் வழங்குவதை விரைவு படுத்துவதற்காக தேவையான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்தின் 38(1)இ பிரிவின் கீழான மீளாய்வின் போது இந்தத் துறை தொடர்பாக கவனம் செலுத்தி கணக்கீட்டு உத்தியோகத்தரினால் எழுத்துமூல அறிவுரைகள் மற்றும் கட்டளைகள்

முடிவடைந்து தமது சான்றிதழை பெற்றுக்கொள்வதற்கு பயிலுனர் மாணவர்களுக்கு இயலுமாகும். எவ்வாறாயினும், இந்த வாய்மொழி பரீட்சை இரண்டினதும் பெறுபேறுகளை பெற்றுக்கொண்டு சான்றிதழை பெற்றுக்கொள்வதற்காக மொத்த பாடநெறிக் காலத்திற்கு மேலதிகமாக ஒரு வருடத்திற்கு அண்மித்த காலம் எடுக்கின்றது என கண்டறியப்பட்டது. இந்தப் பாடநெறி வாழ்க்கைத் தொழில்சார் முன்னுரிமை பாடநெறி ஒன்றாக காணப்படுவதனால், மதிப்பாய்வு செய்முறை மற்றும் பெறுபேறுகள் வழங்குவதற்கு மிக நீண்ட காலம் எடுப்பதனால், பயிலுனரின் கவர்ச்சி குறைவடைவதற்கு மற்றும் பாடநெறியை விட்டுச் செல்வதற்கு காரணமாக இருந்ததென மேலும் கண்டறியப்பட்டது. காணப்படுவதனால்	மதிப்பாய்விற்காக வேண்டப்பட்ட பின்னர், வாய்மொழி மதிப்பாய்வு நடாத்தி அதன் பெறுபேறுகள் மீது இறுதித் தகைமைச் சான்றிதழ் வழங்குதல் மேற்கொள்ளப்படுவதுடன், இந்த செய்முறைக்காக இறுதிக் களப் பயிற்சி (OJT) முடிவடைந்த பின்னர் சுமார் 08 மாதங்கள் அல்லது ஒரு வருடம் தங்கியிருக்க நேரிடுகின்றது என.	வெளியிடப்பட வேண்டும்.

3.2 செயற்பாட்டுத் திறமையின்மை

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	பாடநெறிகளுக்குரிய பாடங்கள் (module – மணித்தியாளங்கள்) உள்ளடக்க வேண்டும் என திட்டமிடப்பட்டிருந்த விரிவுரைகள் எண்ணிக்கை விரிவுரையாளர்களினால் பூர்த்தி செய்தல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது 11 விரிவுரையாளர்களுக்காக திட்டமிடப்பட்டிருந்த மணித்தியாள எண்ணிக்கைக்கு ஒப்பாக 38 சதவீதம் முதல் 75 சதவீதம் வரையான மட்டத்தில் காணப்பட்டது.	கடந்த காலத்தில் செமிஸ்டர் ஒன்றிற்காக ஒதுக்கப்பட்டிருந்த காலம் முன்னர் காணப்பட்ட ஆறு மாதங்களில் இருந்து நான்கு மாதங்கள் வரை படிப்படியாக குறைவடைந்திருந்திருந்தது. இந்த குறைவடைதலுக்கு ஒப்பாக பாட பரிந்துரைகளில் காணப்பட்ட திட்டமிடப்பட்ட விரிவுரை மணித்தியாளங்களின் எண்ணிக்கை நாளதுவரை ஆக்கப்பட்டு அல்லது குறைவடைந்திருந்தது. இதன் காரணமாக விரிவுரையாளர்கள் செய்முறை ரீதியாக தமது விரிவுரைகள் நடாத்துவதற்கு இணைக்கப்பட்டுள்ள கால வரையறையினுள் பாடவிதானங்களில் திட்டமிடப்பட்ட அனைத்து விரிவுரை மணித்தியாளங்களின் எண்ணிக்கையை அனவல்	திட்டமிடப்பட்ட விரிவுரை மணித்தியாளங்கள் விரிவுரையாளர்களினால் பெற்றுக்கொள்வதற்கும் மற்றும் அதற்கும் தேவையான வளங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்தின் 38(1)இ பிரிவின் கீழான மீளாய்வின் போது இந்தத் துறை தொடர்பாக கவனம் செலுத்தி கணக்கீட்டு உத்தியோகத்தரினால் எழுத்துமூல அறிவுரைகள் மற்றும் கட்டளைகள் வெளியிடப்பட வேண்டும்.

		செய்ய முடியாத நிலைமையொன்று ஏற்பட்டிருந்தது.	
(ஆ)	கல்லூரியில் மாணவர்கள் பரீட்சையில் சித்தியடைதல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள தெரிவுப் பரிசோதனையின் போது 2020, 2021 மற்றும் 2022 தொகுதிகளுக்காக நடாத்தப்பட்ட 07 பரீட்சைகளில் 35 மொடியுள்களுக்காக (module) மாணவர் சித்தியடைதல் சதவீதம் 0 சதவீதம் முதல் 50 சதவீதம் வரையான குறைந்த மட்டத்தையுடைய சந்தர்ப்பம் காணப்பட்டது. மேலும், மீண்டும் தோற்றுதல் (Repeat) 51 சந்தர்ப்பங்களை பரிசோதனை செய்த போது சித்தியடைதல் சதவீதம் 0 சதவீதம் முதல் 50 சதவீதம் வரையான குறைந்த மட்டத்தில் காணப்படுவதனால் மாணவர்கள் ஒரே தடவையில் சித்தியடைதல் மற்றும் மீண்டும் தோற்றுதல் சந்தர்ப்பத்தில் சித்தியடைதல் சதவீதத்தை அதிகரிப்பதற்காக முகாமைத்துவத்தின் விசேட கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.	கல்லூரியின் பரீட்சைகள் சித்தியடைதல் தொடர்பான தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது இனங்காணப்பட்டிருந்த அனைத்து பாடநெறிகளிலும் பொது மொடியுள் எனவும், அதாவது ஆங்கில மொழி, தகவல் தொழில்நுட்பம் மற்றும் தொழிலை இலக்காக கொண்ட (Employability Modules) மொடியுள்களாகும். இந்த மொடியுள்களை வெளி விரிவுரையாளர்களினால் நடாத்தப்படுவதனால் கல்லாரி மாணவர்களுக்கு தொடர்ச்சியாக கல்வி அலுவல்களில் ஈடுபடுவதற்கு அல்லது மேலதிக அறிவு பெற்றுக்கொள்வதற்கான சந்தர்ப்பங்களும் மிகவும் குறைவாக இருக்கும் என.	மாணவர்கள் பரீட்சையில் சித்தியடையும் சதவீதத்தை அதிகரிக்க வேண்டும். தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்தின் 38(1)இ பிரிவின் கீழான மீளாய்வின் போது இந்தத் துறை தொடர்பாக கவனம் செலுத்தி கணக்கீட்டு உத்தியோகத்தரினால் எழுத்துமூல அறிவுரைகள் மற்றும் கட்டளைகள் வெளியிடப்பட வேண்டும்.
(இ)	ஆங்கிலம் மற்றும் தகவல் தொழில்நுட்ப பாடத்தின் மொடியுள் (English மற்றும் ICT Modules) முறையான பாடவிதானம் (Curriculums) அந்தப் பாடநெறி ஆரம்பிக்கப்பட்ட காலம் முதல் தயாரிக்கப்பட்டிருக்காததுடன், முறையான பகுப்பாய்வொன்று மேற்கொண்டிருக்காமல் மீளாய்வாவண்டின் போது பாடநெறிக்கான காலம் 04 மாதங்களில் இருந்து 02 மாதங்கள் வரை குறைக்கப்பட்டிருந்தது.	ஆங்கிலம் மற்றும் தகவல் தொழில்நுட்ப பாடத்தின் மொடியுள்களுக்கான பாடவிதானத்தை தயாரித்தல் மற்றும் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்காக மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவிடம் (TVEC) மேலதிக அறிவுரைகள் பெற்றுக்கொள்வதற்காக எதிர்பார்க்கப்படுகின்றது என.	ஆங்கிலம் மற்றும் தகவல் தொழில்நுட்ப விடயத்திற்கான மொடியுள்களுக்காக பாட விதானங்கள் தயாரிக்கப்பட்டு முறையாக அங்கீகரிக்கும் செய்முறையொன்று கடைபிடிக்கப்பட்டு பாடநெறிகள் நடாத்துதல் மேற்கொள்ள வேண்டும்.

3.3 பெறுகை முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
கல்லூரியினால் வருடாந்தம் 30 மாணவர்களைக் கொண்ட தொகுதியொன்றுக்காக நடாத்தப்படுகின்ற விருந்தினர் உபசரிப்பு முகாமைத்துவ பாடநெறி (Hospitality Management) இற்காக பயிற்சி உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்காக 2021 ஜூலை 28 திகதி தேவைக் கோறிக்கைப் பத்திரிகையொன்றின் மூலம் விண்ணப்பிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், குறிப்பிட்ட பெறுகை செய்முறை குறிப்பிட்ட காலப் பகுதியினுள் செயற்படுத்துவதற்கு முடியாமல் போனதால், அந்த உபகரணங்களை பெற்றுக்கொள்வாறு 2024 ஜூலை வரை தாமதமடைந்திருந்தது.	பாடநெறிக்காக தேவையான பயிற்சி உபகரணங்கள் (combi oven) கொள்வனவு செய்வதற்காக கூறுவிலைகள் அழைக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் காணப்பட்ட பொருளாதார வீழ்ச்சி அரசினால் விதிக்கப்பட்ட ஏற்றுமதி இறக்குமதி சட்டங்கள் ஏனைய காரணங்களின் அடிப்படையில் கொள்வனவு செய்வதற்கு முடியாமல் போனது என.	பெறுகை அலுவல்கள் திட்டமிட்டவாறு செயற்படுத்தப்படுகின்றதா என அதற்கு பொறுப்பான உத்தியோகத்தர்களினால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

3.4 மனிதவள முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
2024 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியுடன் உள்ளவாறான பதவயணியை இணக்கம் செய்த போது கூட்டுத்தொகை 30 பதவிகளுக்கான வெற்றிடங்கள் காணப்பட்டது. 2014 ஜனவரி 22 திகதிய DMS/1670 இலக்கம் கொண்ட முகாமைத்துவச் சேவை சுற்றறிக்கையின் படி அங்கீகரிக்கப்பட்ட விரிவுரையாளர்களின் எண்ணிக்கை 21 ஆக காணப்பட்ட போதிலும், 2023 ஆண்டு முதல் கல்லூரியின் நிரந்தர பதவியணியில் கடமையாற்றும் விரிவுரையாளர்களின் எண்ணிக்கை 11 பேராக காணப்பட்டது. மேலும், ஏனைய பதவியணி ஊழியர்களுக்காக ஊழியர் பதவியுயர்வு செய்முறையொன்று காணப்படாமை, கணக்குப் பிரிவிற்காக அங்கீகரிக்கப்பட்ட நிதி	2024 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட பதவியணி இணைப்பு 03 இல் உள்ளவாறாகும். படங்கல பல்கலைக் கழக கல்லூரியில் 2023 ஆண்டு முதல் அங்கீகாரிக்கப்பட்ட பதவியணியில் 50 சதவீத குறைந்த பதவியணி கொள்திறனொன்றின் கீழ் கடமை அலுவல்கள் மேற்கொள்ளப்படுவதுடன், நிறுவனத்தில் நிலவுகின்ற வெற்றிடங்களை மீண்டும் நிரப்புவதற்காக உரிய அங்கீகாரம் கிடைக்கப் பெறாமை இந்த நிலைமைக்கு அடிப்படையான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்த நிலைமை தொடர்பாக மீண்டும் மீண்டும் உயர் முகாமைத்துவத்திற்கு அறிவுறுத்திய போதிலும், இதுவரை குறிப்பிட்ட	அங்கீகரிக்கப்பட்ட பதவியணியை பேணிச் செல்வதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன், கால ரீதியான தேவைப்பாட்டின் படி பதவியணித் திருத்தங்கள் மேற்கொள்வதற்கும் மற்றும் ஊழியர் ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு செய்முறையொன்று அங்கீகரித்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பொருளாளர் ஒருவர் அல்லது உதவி நிதி பொருளாளர் ஒருவர் நிரந்தரமாக நியமனம் செய்யப்பட்டிருக்காமை ஆகிய ஊழியர் சிக்கல்களை தீர்ப்பதற்கு முகாமைத்துவத்தினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

வெற்றிடங்களை மீண்டும் நிரப்புவதற்கு அங்கீகாரம் வழங்கியிருக்கவில்லை என.